**அனுப்புநர்**

முனைவர்.சி.உஷாராணி,
எம்.எஸ்ஸி., பி.எட்., பிஎச்.டி.,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
சென்னை – 600 006.

**பெறுநர்**

அனைத்து முதன்மைக்கல்விஅலுவலர்கள்,
மற்றும் இணை இயக்குநர் (கல்வி),
புதுச்சேரி.

**ந.க.எண்.009823 /எப்1 /2019** **நாள் : 28 .02.2020**

**ஐயா/அம்மையீர்,**

**பொருள் :** சென்னை–6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் – மார்ச் 2020 மேல்நிலை முதலாமாண்டு/ இரண்டாமாண்டு/ இடைநிலை பொதுத்தேர்வுகள் – தேர்வுக்கு வருகைப்புரியாதோர் விவரம் - இணையதளம் வழியாக பதிவேற்றம் செய்தல் – தொடர்பாக.

**பார்வை :**

*****

முதன்மைக் கல்வி அலுவலர்கள், தங்களது மாவட்டத்தில் உள்ள அனைத்து உயர்நிலை / மேல்நிலை தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்களுக்கும் / தலைமையாசிரியர்களுக்கும், நடைபெறவுள்ள மார்ச் 2020 மேல்நிலை முதலாமாண்டு / இரண்டாமாண்டு /இடைநிலை பொதுத்தேர்வுகள் நடைபெறும் நாட்களில், தேர்வுக்கு வருகைப்புரியாதோர் விவரத்தினை பின்வரும் அறிவுரைகளைப் பின்பற்றி அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்தின் வழியாக பதிவேற்றம் செய்வதற்கு உரிய அறிவுரைகளை வழங்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

1. தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள், தங்கள் தேர்வு மையத்தில் தேர்வுக்கு வருகைப்புரியாதோர் விவரத்தினை (பாடவாரியாக) தேர்வு நடைபெறும் நாளன்றே பிற்பகல் 4:00 மணிக்குள் தங்கள் தேர்வு மையத்திற்கான USER ID மற்றும் Password–ஐ பயன்படுத்தி,அரசுத் தேர்வுகள் இயக்கக இணையதளத்தின் வாயிலாக **(www.dge.tn.gov.in --- click here to access online portal -- Higher Secondary Second Year March 2020 / Higher Secondary First Year March 2020 / SSLC March 2020 -- User ID -- Password --** கொண்டு **-- Absentees Details** பதிவேற்றம் செய்திட வேண்டும்.

..2

2. தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள், தங்கள் தேர்வு மையத்தில் தேர்வுக்கு வருகை புரியாதவர்கள் எவரும் இல்லை எனில், கண்டிப்பாக இணையதளத்தின் வாயிலாக **NIL REPORT** –ஐ (**Day / Subject wise**) பதிவு செய்திட வேண்டும்.

3. தேர்வு மைய முதன்மைக் கண்காணிப்பாளர்கள், தேர்வு நடைபெறும் நாட்களில் ஒவ்வொரு நாளும் பிற்பகல் 4:00 மணிக்குள் இப்பணியினை கண்டிப்பாக செய்து முடிக்கவேண்டும்.

ஒம்/-

**இயக்குநர்**

<u>நகல்:</u>

1. அனைத்து அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்

} – தகவலுக்காக